‘கள ஆய்வில் முதலமைச்சர்’ திட்டம் மூலம் - மூன்று ஆண்டுகளில் - 28 வகையான

மொத்தம் 28 கோடியே 75 இலட்சம் சான்றிதழ்கள் வழங்கல்!

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையில்

25 அறிவிப்புகளை வெளியிட்டு – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பதிலுரை!

சென்னை, ஜீன் 26-

கள ஆய்வில் முதலமைச்சர் திட்டம் மூலம் - கடந்த மூன்று ஆண்டுகளில் 28 வகையான மொத்தம் 2 கோடியே 75 இலட்சம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மான்யக் கோரிக்கையில் 25 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பதிலுரை யாற்றுகையில் குறிப்பிட்டார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பதிலுரை வருமாறு:

திராவிட இயக்கத்தின் பிதா மகன், அய்யா பெரியார், அறிவுலக மேதை அறிஞர் அண்ணா ஆகியோர் வழி நின்று, இன்று நூற்றாண்டு கண்டு, பேராண்டத்தலைவர், திராவிட பெருந்தலைவன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர் துயிலும் திசை நோக்கி, வணங்குகிறேன். எல்லோருக்கும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும். சமத்துவம் பேணி வாழவேண்டுமென்று என்கிற திராவிட இயக்கத்தின் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டு திராவிட மாடல் ஆட்சியை திறம்பட நடத்துகிற,

முன்னவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, அரசு தலைமைக் கொறடா அவர்களே, சகோதர சட்டமன்ற உறுப்பினர்களே, எனக்கு வாக்களித்து வெற்றிப் பெறச் செய்த அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களே, விருதுநகர் மாவட்ட பொது மக்களே உங்கள் அத்துனைப் பேருக்கும் இந்தச் சமயத்தில் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மக்களின் நலன் காக்கும் துறை!

வருவாய்த் துறையின் பணி, இது ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட துறை. இந்தத் துறை ஒரு காலத்தில் வருவாய்த் துறையாக இருந்த துறை, நில வரி வசூல் செய்கின்ற அந்தப் பணியை செய்தத் துறை, இன்றைக்கு மாறியிருக்கிறது. இந்தத் துறை தற்போது பொது நிர்வாகத் துறையாக, மக்களின் நலன் காக்கும் துறையாக செயல்பட்டு வருகிறது. பொது மக்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் வழங்குதல், ஒய்வூதியம் வழங்குதல், சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல், குறைதீர்க்கும் முகாம்கள் நடத்தி, பொது மக்களின் குறைகளை அறிந்து அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல். பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பேரிடரின்போது பொது மக்களைப் பாதுகாத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், நில உரிமையாளர்களுக்கு பட்டா வழங்குதல், அரசு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தி கொடுத்தல், அரசு நிலங்களைப் பாதுகாத்து ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், நிலச் சீர்திருத்தச் சட்டங்களை அமல்படுத்துதல், அரசு நிலத்தை தனியாருக்கு குத்தகைக்கு வழங்குதல், பட்டா மாறுதல் செய்கின்ற நிலத்தின் எல்லைகளை அளந்து காட்டுதல் இதுபோன்ற காரியங்களை மட்டுமல்லாமல், சட்டம் ஒழுங்கை பாதுகாக்கின்றப் பணிகளையும், பொதுத் தேர்தல் நடத்துகின்றப் பணிகளையும் வருவாய்த் துறை இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறது.

சான்றிதழ் வழங்குவதை தலைவர் கலைஞர் அவர்கள்தான் முதலிலே முறைப்படுத்தி வந்தார்கள். பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இருப்பிடச் சான்றிதழ், வருமான சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆகியவற்றைப் பள்ளிகளிலே வழங்க வழி செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சான்றிதழ்கள் ஆன்லைன் மூலம் வழங்கல்!

அந்த வகையிலே இன்றைக்கு நம்முடையத் தலைவர், அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 2020, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் ONLINE மூலமாக 26 வகையான சான்றிதழ்கள் வழங்க வேண்டுமென்று சொல்லி உத்தரவிட்டு, இன்றைக்கு 26 வகையான சான்றிதழ்களை ONLINE மூலமாக நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம். சான்றிதழ்களை வழங்குவதில் காலதாமதம் செய்யக்கூடாது என்று சொல்லி, 15 நாட்களுக்குள் சான்றிதழ்கள் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றோம். 7.5.2021 அன்று, அதாவது சென்ற ஆட்சிக்காலத்தின் இறுதியில் 15 தினங்களுக்குட்பட்ட, சான்றிதழ்களுக்காக மொத்தம் 4.65 இலட்சம் மனுக்கள் நிலுவையிலிருந்தன. அ.இ.ஆ.தி.மு.க. காலத்தில் மொத்தம் நான்கு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மனுக்கள் நிலுவையிலிருந்தன. இந்த நிலுவைகளைப் போக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தோம். தாலுகா வாரியாக மனுக்களின் நிலுவை கண்காணிக்கப்பட்டது. 15 தினங்களுக்கு ஒரு முறை எந்த தாலுகாவில் அதிகம் நிலுவை இருக்கிறதோ அவைகளையெல்லாம் சரிபார்த்தோம். அப்படி சரி பார்த்ததன் விளைவாக இன்றைக்கு நம்முடைய அரசில் வெறும் 1039 மனுக்கள் மட்டும்தான் 15 நாட்களுக்கு மேலாக நிலுவையில் இருக்கும் நிலை உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இரண்டு கோடியே எழுபத்து ஐந்து இலட்சம் சான்றிதழ்கள் வழங்கியிருக்கின்றோம். இந்த மூன்று ஆண்டுகளில் அனைத்து வகையான, சுமார் 28 வகையான சான்றிதழ்கள் மொத்தம் இரண்டு கோடியே எழுபத்து ஐந்து இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. கள ஆய்வில் முதலமைச்சர் திட்டம், முதலமைச்சர் அவர்கள் ஆய்வுச் செய்ய சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். அ.இ.ஆ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முப்பத்து நான்கு இலட்சத்து ஐந்தாயிரம் பேருக்குத்தான் OAP வழங்கியிருந்தார்கள்.

80 ஆயிரம் பேருக்கு முதியோர் ஓய்வூதியம்!

நம்முடைய ஆட்சிக் காலத்தில் இப்போது 34 இலட்சத்து 90 ஆயிரம் பேருக்கு OAP வழங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோக, அதிகப்படியாக இன்னும் 80 ஆயிரம் பேருக்கு விரைவிலே வழங்கவிருக்கிறோம். இவ்வளவு தாமதத்திற்கு காரணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திலே அனைத்துப் பணியாளர்களும் பணியாற்றியக் காரணத்தால், இந்தப் பணிகளை கொஞ்சம் நிறுத்தி வைத்து, அது முடிந்த பின்னர் இந்தப் பணிகளைப் பார்க்கலாம் என்ற சொன்ன காரணத்தினால் நிறுத்தி வைத்திருக்கிறோம். இன்னும் 80 ஆயிரம் பேருக்கு வழங்கவிருக்கிறோம். நம்முடைய ஆட்சியிலேதான் 35 ரூபாயாக இருந்த OAP பணத்தை கலைஞர் அவர்கள் 500 ரூபாயாக உயர்த்தி வழங்கினார்கள். அதை 1,000 ரூபாயாக சென்ற ஆட்சியில் ஜெயலலிதா அம்மா அவர்கள் உயர்த்தினார்கள். இன்றைக்கு அந்த 1,000 ரூபாயை 1,200 ரூபாயாக நம்முடைய முதல்வர் தளபதி அவர்கள் உயர்த்தியுள்ளார்கள். (மேசையைத்தட்டும்ஒலி) மாற்றுத்திறனாளிகளுக்கு 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தியதும் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மொத்தம் 4,000 கோடியே 87 இலட்சம் ரூபாய்தான் OAPக்காக நிதி ஒதுக்கியிருந்தார்கள். ஆனால், நம்முடைய ஆட்சிக் காலத்தில் 5,337 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் அ.தி.மு.க. ஆட்சியை விட 1,250 கோடி ரூபாய் அதிகப்படியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

மக்கள் தொடர்பு முகாம். ஒவ்வொரு மாதமும் மூன்றாவது புதன்கிழமை யன்று ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வேலை நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. சென்ற ஆட்சியில் அம்மா திட்டம் என்று கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டு ஒரு வருடம் வரை ஒழுங்காக நடைபெற்றது. அடுத்த வருடத்திலிருந்து அந்தத் திட்டம் சரியாக செயல்பட வில்லை. என்ன காரணமென்றால், தாசில்தார் மட்டும்தான் ஆய்வுக்குச் சென்றார். இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆய்விற்கு செல்கிறார்கள். மாதத்தில் 3வது புதன்கிழமை மாவட்ட ஆட்சித் தலைவர் காலை 9.00 மணிக்கு தாசில்தாருடன் VILLAGEக்குச் சென்று அந்தப் பகுதியை சரிபார்த்து மறுநாள் காலை 9.00 மணி வரைக்கும் இருந்து, அந்தப் பகுதிகளை SURVEY செய்து என்ன குறைகள் இருக்கிறது என்பதையெல்லாம் பார்க்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு அதற்கு 50 ஆயிரம் ரூபாய் செலவிற்கும் ஒதுக்கியுள்ளார்கள். அந்த ஒருநாள் முழுவதும் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கேயேதான் தங்கியிருக்கிறார். எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் எங்கேயே இருக்கிறார் என்று பார்த்தோம், NIGHTல் வீட்டிற்கு வந்துவிடுவார் என்றுபார்த்தோம்; வரவில்லை. அந்தக் கிராமத்திலேயே தங்கியிருந்து காலை 9.00 மணி வரையில் இருந்துவிட்டுதான் வந்தார்கள். இது நம்முடைய முதலமைச்சர் தளபதி கொண்டு வந்தத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

வெப்ப அலை தாக்கம் - மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவிக்கப்படும்!

இலவச வேட்டி-சேலை!

இலவச வேட்டி, சேலை 2024-2025 ஆம் ஆண்டில் 1 கோடியே 52 இலட்சம் பேருக்குக் கொடுத்திருக்கிறோம். ஒருசில பேர் சந்தேகப்பட்டு கூடுதலாக வாங்கியிருக்கிறீர்களே என்று கேட்கிறார்கள். நெய்து கொடுப்பது கைத்தறித் துறை, கொடுப்பது தாலுகா ஆபீஸ். ஒருசில பேர் என்ன கேட்டார்கள் என்றால், இவ்வளவு நெய்து கணக்கு காட்டுகிறீர்களே, இவ்வளவையும் கொடுத்தீர்களா என்று கேட்கிறார்கள். இல்லை, மிச்சம் இருப்பதை அடுத்த வருடத்திற்கு RESERVE ஆக வைத்துக்கொள்கிறோம். அதை ஒன்றும் செய்ய போவது இல்லை. RESERVE ஆக வைத்திருக்கிறோம். 1 கோடியே 63 இலட்சம் துணிகள் நெய்யப்பட்டிருக்கின்றன. அதில் 1 கோடியே 52 இலட்சம் வேட்டிகளும், 1 கோடியே 52 இலட்சம் சேலைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. RESERVEல் வைத்திருப்பதை அடுத்த வருடத்திற்கு கொடுக்கவிருக்கிறோம்.

பேரிடர். எல்லோரும் பேசியபோது பேரிடரைத் தான் அதிகமாக பேசினார்கள். என்ன காரணம் என்று பார்த்தால், மழையும், வெள்ளமும் இந்த வருடம் நம்மை வாட்டி எடுத்துவிட்டது. நம்முடைய தலைவர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 2021 ஆம் ஆண்டில் TAUKTAE புயல், YAAS புயல் என இரண்டு புயல்கள் வந்தது. 2022 ஆம் ஆண்டில் MANDOUS புயல் வந்தது. மயிலாடுதுறை மாவட்டத்தில் கன மழை. காவேரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு. சென்ற வருடம் 2023 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் பருவம் தவறிய மழை.

புயல் நிவாரணம் ரூ.6 ஆயிரம் வழங்கியவர் முதல்வர்!

அதேநேரத்தில் புயல் என்று பார்த்தீர்களென்றால் நமக்கு மிக்ஜாம் புயல் வந்தது. தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகப்படியான மழை. இதை எல்லாவற்றையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் சமாளித்த முதலமைச்சர் நம்முடைய தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2015லே வெள்ளம் வந்தது. சென்ற ஆட்சியில் அந்த முதலமைச்சர் இருக்கும்போதுதான் சென்னையே வெள்ளத்தில் சென்றது 2015ல். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த 3 வருடங்களில் வந்த புயலை யும், மழையையும் சரி செய்தார். எல்லாவற்றையும் சரி செய்தார். அதேமாதிரி பார்த்தீர்களென்றால் எல்லோருக்கும் ஆறாயிரம் ரூபாய் கொடுத்தார்கள். இந்த முறை பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறாயிரம் ரூபாயும், சாதாரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயிரம் ரூபாயும் கொடுத்தார்கள். இதையெல்லாம் பார்த்தீர்களென்றால் சென்ற முறையைக் காட்டிலும், இந்த முறை அதிகப்படியாக முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று வறட்சி வந்ததற்கும் கொடுக்கிறார்கள். மழை பெய்தாலும் கொடுக்கிறார்கள். புயல் வந்ததற்கும் கொடுக்கிறார்கள். வறட்சிக்கும் கொடுக்கிறார்கள். எல்லா வகையிலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த பேரிடர் நேரத்திலே ரொம்ப அக்கறை எடுக்கிறார்கள். எல்லா நேரமும் பார்த்தீர்களென்றால் மழை வந்துவிட்டது

என்றால், நேராக CONTROL ROOMக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் வருவதற்கு முன்னால் நான் ஓடிச் சென்று அங்கு இருக்க வேண்டும். CONTROL ROOMக்கு வந்து சம்பந்தப்பட்ட COLLECTORSக்கெல்லாம் PHONE செய்து அங்கு நிலைமை எப்படி இருக்கிறது, GOVERNMENT சார்பில் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் எச்சரிக்கை செய்யக்கூடிய முதலமைச்சராகதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார். ஆகவே தான் இந்தப் புயல் வந்த நேரத்தில், மழை வந்த நேரத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடியெல்லாம் பார்த்தீர்களென்றால் அவ்வளவு மோசமாக இருந்தது. அதையெல்லாம் சரிசெய்து, முதலமைச்சர் அவர்கள் அங்கு சென்று இரண்டு நாள் தங்கியிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வேண்டிய அறிவுரையைச் சொல்லி முதலமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று நிவாரணம் வழங்கினார்கள். அதேபோன்று திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் மழை பெய்த நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் இரண்டு நாட்கள் சென்னையில் மழை பெய்தபோது மட்டும் இரண்டு நாட்கள் முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று நிவாரணம் வழங்கினார்கள். (குறுக்கீடு) அதைக் கடைசியாக சொல்கிறேன். எல்லோருக்குமே தாலுகா OFFICE, RDO OFFICE. இதையெல்லாம் யாரும் காதில் வாங்கவில்லை. எனக்குத் தெரியும் நானாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். (சிரிப்பு) எல்லோருக்குமே பார்த்தீர்களென்றால், எல்லா MLAவும் அநேகமாக நெருக்கி, ஆளுக்கு ஒரு தாலுகா OFFICE, ஆளுக்கு ஒரு RDO OFFICE, VAO OFFICE BUILDING, தாலுகா OFFICE BUILDING இது எல்லோரும் கேட்டிருக்கிறார்கள்.

நல்ல செய்தி வேகமாக கிடைக்கும்!

HONOURABLE SPEAKER அங்கிருந்து கேட்கிறார்கள். இது அனைத்துமே நாங்கள் செய்யப் போகிறோம். எப்படி செய்யப் போகிறோம் என்றால், முன்பு இவ்வளவு ஜனத் தொகை கிடையாது. ஒரு தாலுகாவிற்கு இவ்வளவு ஜனத் தொகை கிடையாது. அங்கு ஒரே பரப்பளவு இருக்கிறது. அங்கு VAO OFFICEல் பார்த்தீர்களென்றால் பழைய VAO தான் இருக்கிறார்கள். 3 கிராமம், 4 கிராமம் சேர்ந்து ஒரு VAO தான் இருக்கிறார்கள். இதையெல்லாம் மாற்ற வேண்டுமென்று சொல்லி, இப்போது எல்லாம் READY பண்ணி அந்த வேலை பார்த்துக்கொண்டிருக்கிறோம். முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் சொல்லிவிட்டோம். இதை எப்படியாவது நாம் சரி செய்யவில்லை என்றால், பட்டா வழங்குவது LATE, LATE என்று சொல்லும் போதுதான் இந்தப் பிரச்சினை வந்தது. இருக்கிற அதிகாரிகளுக்கு வேலைப் பளுவைக் குறைத்தால் தானே வேகமாகக் கொடுப்பார்கள். வேலைப் பளு அதிகமாக இருந்தால் எப்படி கொடுப்பார்கள். அதனால், இதையெல்லாம் சொல்லியிருக்கிறோம். அதனால், இது எல்லோருக்கும் வரும். இதையெல்லாம் நாங்கள் SCALE பண்ணுகிறோம். ஜனத் தொகை இவ்வளவு இருக்க வேண்டும், பரப்பளவு இவ்வளவு இருக்க வேண்டும். சென்னையில் பார்த்தீர்களென்றால் ஒவ்வோர் தொகுதியிலும் ஒரு தாலுகா OFFICE தான் இருக்கிறது. அதையெல்லாம் எப்படி சரிகட்ட முடியும்? இதையெல்லாம் பார்த்துவிட்டு நாங்கள் முடிவு செய்திருக்கிறோம், உங்களுக்கெல்லாம் நல்ல செய்தி வேகமாக கிடைக்கும் அதற்கு வேண்டிய ஏற்பாட்டை பக்கத்திலிருக்கிற FINANCE MINISTERஐ சுரண்டி ஒரு பக்கம் சதையே போய்விட்டது. (சிரிப்பு) ஒரு பக்கம் சுரண்டிக் கொண்டேதான் இருந்தேன். நேற்றுக்கூட பார்த்தீர்களென்றால் அறிவிக்க உட்கார்ந்திட்டு இருந்தேன். அதனால், இதையெல்லாம் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். உங்களுக்கெல்லாம் நல்ல செய்தி கட்டாயம் வரும். தாலுகா OFFICE இதையெல்லாம் இன்றைக்குச் சொல்லவில்லை, FINANCEல் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் ஒரு வரையறை பண்ணச் சொல்கிறார்கள். இந்த வரையறைக்குள் நீங்கள் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் கொடுக்கிறது என்று பார்த்தீர்களென்றால், . . .

ஒன்றிய அரசால் ஒரு பயனும் இல்லை!

மிக்ஜாம் புயல் வந்தது. மிக்ஜாம் புயல் வரும் போது ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் வருகை புரிந்தார்கள். மாநிலத்தைச்சுற்றிப்பார்த்தார்கள். (குறுக்கீடு) அக்காதங்கச்சி. அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் வருகை புரிந்துள்ளார்கள், மாநிலத்திற்கு அதிக அளவிலான நிதி ஒதுக்கீடு செய்வார்கள் என்று எண்ணியிருந்தோம். சரி. அதுவும் முடிந்துவிட்டது. பிறகு திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய தென்மாவட்டங்களுக்கு ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் வருகை புரிந்தார்கள். சரி, நிதித் துறை அமைச்சர் அவர்கள் வருகை புரிந்துள்ளார்கள், நமக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்வார்கள் என்று நினைத்தோம். இருவரும் ஒன்றும் செய்யவில்லை. நம் மாநிலத்தில் கோரிய நிதி ரூ.37,907 கோடி ரூபாய். ஆனால் அவர்கள் அளித்தது ரூபாய் 272 கோடி மட்டுமே வழங்கினார்கள். இதற்கு இரண்டு அமைச்சர்கள் வருகை புரிந்துள்ளார்கள். மாநிலத்தில் ஒன்றிய அமைச்சர்கள் வந்துள்ளதாக அறிந்ததும் நிவாரணம் கிடைக்கும் என்று எண்ணி விரைந்து சென்று பார்த்தோம். அவ்வாறு விரைந்து சென்று பார்த்தும் ஒரு பயனும் இல்லை.

மேலும், தற்போது எப்போதும் இல்லாத அளவில் தமிழ்நாட்டில் வெப்ப அலையின் தாக்கம் புதிதாக, அதிகமாக உள்ளது. இதுவரையில் இதுபோன்ற வெப்ப அலையின் தாக்கம் இவ்வளவு அதிகமாக இருந்ததில்லை. இந்த வருடம் அனைத்து பத்திரிகைகளிலும் போக்குவரத்து பாதிக்கும் அளவில் வெப்ப அலையின் தாக்கம் இருந்தது என்று செய்திகள் வெளிவந்ததையடுத்து, அரசு அதனையும் பேரிடரில் சேர்த்துவிட்டு, அதிக மழை பெய்தால் எவ்வாறு பேரிடரில் சேர்க்கப்படுகிறதோ, அதேபோன்று வெப்ப அலையின் தாக்கத்தையும் பேரிடரில் சேர்த்து, நடவடிக்கைகள் நிச்சயமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது அ.தி.மு.க. இந்த அவையில் இல்லை. அவர்களது ஆட்சிக் காலத்தில் 2015 ஆம் ஆண்டில் புயல் வந்தபோது, சென்னை AIRPORTல் 6 மணி நேரம் தண்ணீர் தேங்கி, விமானம் தரையிரங்க இயலாத நிலை இருந்தது. ஆனால், நமது ஆட்சிக் காலத்தில் மிக்ஜாம் புயல் வந்தபோது, 24 மணி நேரத்தில் தண்ணீர் வடிக்கப்பட்டு, விமானம் தரையிறக்கப்பட்டது. பேரிடர் காலத்தில் இதைவிட இந்த ஆட்சி நல்லாட்சி என்பதற்கு வேறென்ன சாட்சி வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஆட்சியில் 6 நாட்கள் விமான நிலையத்தில் தண்ணீர் தேங்கி நின்று விமானம் தரையிறங்க இயலாத நிலை இருந்தது. ஆனால், நமது ஆட்சிக் காலத்தில் ஒரே நாள்தான். ஒரே நாளிலேயே தண்ணீர் வடிக்கப்பட்டு, விமானம் தரையிறக்கப்பட்டது. இவ்வாறு ஆட்சி நடைபெறுகிறதென்றால் அதற்கு காரணம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அனைத்து பணிகளும் சிறப்பாக நடைபெறும்.

வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை!

தற்போது வீட்டு மனைப் பட்டா வழங்கும் பணிகள் துரிதப்படுத்தப்படு கின்றன. முதலமைச்சர் அவர்கள் வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் மிகுந்த அக்கறை செலுத்துகிறார்கள். அவற்றிற்கெல்லாம் விரைவில் நல்ல முடிவாக எடுக்கப் பட்டு கட்டாயமாக, வேகமாக வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருக் கின்றார்கள். சென்னை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்தாலே எனக்கு பயமாக இருக்கும். அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் முதலில் பட்டாதான் கேட்பார்கள். அவற்றிற்கெல்லாம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், தம்பி உதயநிதி அவர்கள் தலைமையில்தான் கூட்டம் கூட்டப்பட்டது; அனைத்து உறுப்பினர்களும் வருகை புரிந்திருந்தனர். அப்போது முடிவு செய்யப்பட்டு, அப்போது நிலங்கள் மூன்று வகைகளாக இருப்பதையும், அந்த 3 வகைகளையும் எவ்வாறு சரிசெய்வதென்பதை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அனைவரும் உதவிகரமாக இருக்கும் நேர்வில், உதவிகரமாக இருப்பீர்களா?(குறுக்கீடு) சரி. நிச்சயமாக சரிசெய்யப்படும்.

நில அளவைத் துறை:

SUBREGISTRAR அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டவுடன் அவற்றில் 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலங்கள் ஒரே நபருக்கு இருந்தால், அவர்களுக்கு உடனடியாக பட்டா மாற்றிக் கொடுக்கப்படுகின்றன. உரிய முறையில் ONLINEல் பதிவு செய்துகொடுக்கப்படுகின்றன. தற்போது ஒரு நபர் இரண்டு ஏக்கர் நிலம் வாங்கி PLOT போட்டிருந்தால், அதுவும் DTCP APPROVAL பெறப்பட்டிருந்ததானால், அவை உடனடியாக எங்களுக்கு வந்துவிடும். நீங்கள் பத்திரம் பதிவு செய்யும் போது அவை PLOTWISE பதிந்து கொடுத்துவிடப்படுகின்றன. முன்காலத்தில் ஒரு PLOT வாங்கினால் துறை அதிகாரி அந்த இடத்திற்கு சென்று அளந்து கொடுக்க வேண்டும். தற்போது அந்த முறையல்ல. இது போன்று அனைத்துப் பணிகளையும் எந்தெந்த முறையில் எளிதாக்க இயலுமோ அந்தந்த முறைகளில் துறை அவற்றை மேற்கொண்டு வருகிறது. துறையின்மூலம் எங்களால் இயன்ற அளவில் பணிகள் மேற்கொண்டு வருகிறோம். (குறுக்கீடு) SURVEYOR நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆட்சி அமைந்தபிறகு தான் தாசில்தார்கள் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளனர், மண்டல போக்குவரத்து அலுவலர்கள் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளனர்; தாற்காலிக SURVEYORகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். துறை முடிந்த அளவில் அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டுவருகிறது. இந்த வருடத்திலிருந்து அடுத்த வருடத்திற்கான என்ன வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதையும் ஆராய்ந்து பணிகள் மேற்கொள்கிறோம். எங்களது மனதிற்கு திருப்தி ஏற்படுகிற அளவிலான பணிகளை சிறப்புற மேற்கொள்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மொத்தம் 218பேர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். 218 வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்தேன். ஒவ்வொரு உறுப்பினரும் என்னென்ன வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள் என 218 வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்தேன். அதில் MAXIMUM பார்த்தால் TALUK OFFICEதான் இருக்கிறது. அதேமாதிரி நிலப் பட்டாக்கள்தான் இருக்கிறது. அதற்கெல்லாம் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்பார்கள் என சொல்லிக்கொண்டு, 218 வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்து பார்த்தேன். அந்த புத்தகத்தை முழுவதுமாக நான் படித்து பார்த்தேன். அவற்றிற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக நான் எடுப்பேன். ஆகவே, ஏனையவற்றை கவனத்திலே கொண்டு வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்காகத்தான் விவாதத்தை விரைவாக முடித்தேன். எனக்கு உதவியாக இருந்த தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர் நா.முருகானந்தம், அவர்களுக்கும், டாக்டர் பு. உமாநாத், அவர்களுக்கும், எம்.எஸ். சண்முகம் அவர்களுக்கும், திருமதி அனுஜார்ஜ், அவர்களுக்கும், வருவாய் நிர்வாக ஆணையாளர் எஸ்.கே.பிரபாகர், அவர்களுக்கும் நிதித் துறை செயலாளர் த. உதயச்சந்திரன் அவர்களுக்கும் வருவாய்த் துறை செயலாளர் ராஜாராமன் அவர்களுக்கும், நிர்வாக ஆணையாளர் மரியாதைக்குரிய கே.எஸ்.பழனிச்சாமி, அவர்களுக்கும் நிலச் சீர்திருத்த ஆணையர் முனைவர் வெங்கடாசலம், அவர்களுக்கும், வருவாய் நிர்வாக ஆணையாளர் மரியாதைக்குரிய முனைவர் நடராஜன், அவர்களுக்கும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் இராமன், அவர்களுக்கும் நில அளவைத் துறை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் மரியாதைக்குரிய ப. மதுசூதன்ரெட்டி, அவர்களுக்கும், சமூக பாதுகாப்பு திட்ட ஆணைஎயார் ஜான், அவர்களுக்கும் மற்றும் பிற அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1.வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு ரூ.12.24 கோடி மதிப்பீட்டில் 136 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பணியாற்றும் சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர்களுக்கு ஏற்கெனவே ரூ.10 கோடி செலவில் 114 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்ய நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 77 புதிய வாகனங்கள் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக, வாகனம் ஒன்றுக்கு ரூ.9 இலட்சம் வீதம், ரூ.12.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 136 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

2.மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு ரூ.84 இலட்சம் செலவில் 7 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

விருதுநகர், தருமபுரி, திருவண்ணாமலை, கடலூர், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களை சார்ந்த 7 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு ஏற்கனவே பயன்படுத்தி வந்த வாகனங்களை கழிவு செய்து அதற்கு மாற்றாக வாகனம் ஒன்றுக்கு ரூ.12 இலட்சம் வீதம் 7 புதிய வாகனங்கள் ரூ.84 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

புதுக்கோட்டை DROவிடம் கொடுத்து விடுவோம்.

3.சொந்த அலுவலகக் கட்டடங்கள் இல்லாத / பழுதடைந்த நிலையில் உள்ள 33 வருவாய்த்துறை அலுவலகக் கட்டடங்கள் / அலுவலகங்களுடன்கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் ரூ.41.25 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்படும்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பழுதடைந்த நிலையில் உள்ள 3 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்படும்.

சொந்த அலுவலகக் கட்டடங்கள் இல்லாத / பழுதடைந்த நிலையில் உள்ள 5 வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்படும்.

மேலும், 25 வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களுடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் ரூ.8.75 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்படும்.

4.புயல், அதி கனமழை, வெள்ளப்பெருக்கு போன்ற பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளாகும் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 3 நிரந்தர பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையங்கள் ரூ.36 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், புயல், அதி கனமழை, வெள்ளப்பெருக்கு போன்ற பேரிடர்களால் பாதிக்கப்படும் பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற்றத் தேவையான தேடல் மற்றும் மீட்பு படகுகள், வாகனங்கள், உபகரணங்களை முன்கூட்டியே நிலைநிறுத்தவும், குடிநீர், பால், ரொட்டி உள்ளிட்ட நிவாரண பொருட்களை பாதிக்கக் கூடிய பகுதிகளில் முன்கூட்டியே சேகரித்து வைத்து கொள்ளவும் 3 நிரந்தர பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையங்கள் ரூ.36 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5.தூத்துக்குடி மாவட்டத்தில் மழை வெள்ளப் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய மக்களை பாதுகாப்பாக தங்கவைக்க ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் 2 பல்நோக்கு நிவாரண மையங்கள் கட்டப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மழை வெள்ளப் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய மக்களைத் தங்க வைக்கத் தேவையான நிவாரண மையமாகவும், பேரிடர் அல்லாத காலத்தில் பள்ளிக்கூடங்களாகவும், சமுதாயக் கூடங்களாகவும் செயல்படும் 2 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

6.பேரிடர்களின்போது பொதுமக்கள், மீனவர்கள், சுற்றுலாப் பயணிகளை பாதுகாக்க, அபாய எச்சரிக்கை அறிவிப்பு மற்றும் ஒலி எழுப்பும் 1000 முன்னெச்சரிக்கை அமைப்புகள் ரூ.13.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்